கிராமப் பொருளாதார மேம்பாட்டிலே அக்கறை கொள்ளும் வகையில், ஃபார்ம் ஓரியன்டட் பேங்க், ஃபார்ம் ஃபஸ்ட் பேங்க், கிரெடிட் சொஸைட்டி, எல்.டி. பேங்க்ஸ் ஆகியவற்றின் பணிகளை மாற்றியமைத்துக் கொண்டுவர இருக்கிறோம்.

புதிய சட்டத்தை இந்த அவையிலேயே எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது அரசினுடைய அவாவாக இருந்தாலும் அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுக்கேற்ப அடுத்த கூட்டத் தொடரில் வரவிருக்கிறது. அதுகாறும் தவிர்க்க முடியாமல் தனி அலுவலர்கள் பதவிக்காலம் நீட்டிக்கப்பட வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். மக்களுடைய இயக்கமான கூட்டுறவு இயக்கம் தனி அலுவலர்களுடைய கையிலே தொடர்ந்து இருக்க வேண்டுமென்ற எண்ணம் இந்த ஆட்சிக்கும் இல்லை என்று சொல்லி இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்து மேற்படி சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக்குழு தீர்மானித்தபடி பேரவை அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

7.9.82 செவ்வாய்.	அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்.

8.9.82 புதன்
1. 1982-83 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கை பேரவைக்கு அளித்தல்
2. அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்.

9.9.82 வியாழன்
1. 1982-83 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கை மீது விவாதமும், மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும்.
2. நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல்.
3. அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்.

10.9.82 வெள்ளி
1. நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்
2. அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்.

பேரவை வழக்கம்போல காலை 9 மணிக்குக் கூடும்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, இன்று காலை விவாதம் பண்ணியதிலே ஏற்றுக் கொண்ட விஷயம் விடப் பட்டிருக்கின்றது. வறட்சி நிலைபற்றியும், காவிரி நீர் விவகாரம் பற்றி—நமக்குக் கம்மியாக கொடுக்கப்படுவதன் காரணமாக—இந்த விஷயங்களைப் பற்றி பேசுவதற்கு, டிஸ்கஷன் செய்வதற்கு அக்காமடேட் செய்ய வேண்டும் என்பது விடப்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவைகளை எல்லாம் கால் அட்டன்ஷனிலே பேசிக்கொள்ளலாம் என்பதால் விடப் பட்டுள்ளது.

திரு. ரா. உமாநாத்: இவைகள் விவாதிக்கப்படும் என்ற எண்ணத்தினாலேதான் 9-ம் தேதியே முடிவடையவிருக்கும் இந்த சட்டசபை 10-ம் தேதிக்கும் தள்ளி வைக்கப்பட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன்: துணைத் தலைவர் அவர்களே, இன்று காலையிலே கூடிய அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலே 9-ம் தேதியோடு முடித்துக்கொள்ளலாம் என்று பேச்சு வந்த நேரத்தில் 10-ம் தேதியும் சட்டமன்றக் கூட்டம் இருக்க வேண்டும் என்பதற்காக சொல்லப்பட்ட காரணம் இந்த வறட்சி நிலையும், காவிரி தண்ணீர் பற்றியும்தான். ஆனால் நீங்கள் சொல்வதுபோல கால் அட்டன்ஷனில் எல்லா உறுப்பினர்களும் பங்குகொள்ள முடியாது. தமிழ்நாட்டை எதிர் நோக்கும் ஒரு முக்கியமானப் பிரச்சினையாக இருப்பதால் இதைப்பற்றி விவரமாகப் பேசவேண்டும் என்பதற்காகத்தான் 10-ம் தேதியும் ஏற்றுக்கொள்ளப்பட்டது, அதற்குத் தகுந்தாற்போல ஒரு அறிவிப்பை வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர்; 10ம் தேதிக்குள் சொல்லு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, 9ம் தேதியும் 10ம் தேதியும் கூட சட்ட முன்வடிவுகளை விவ திப்பதற்கு எடுத்துக் கொள்வது என்றுதான் போடப்பட்டிருக்கிறது. அலுவல் ஆய்வுக்குழு எடுத்த முடிவிற்கு இணங்க, 9ம் தேதி சட்ட முன்வடிவுகளைக் கூடுமான வரையில் முடித்துவிடுகிற சூழ்நிலையை நாம் ஏற்படுத்துவோமானால், இந்த டிஸ்கஷனை வைத்துக்கொள்ள லாம். நாளையும், நாளை மறுநாளும் நிலைமை தெளிவாகிற போது, இதைப்பற்றி மாண்புமிகு பேரவைத் தலைவரைக் கலந்து கொண்டு தக்க நடவடிக்கைகள் எடுக்கலாம்.

5) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) அலுவல் வரிசை மாற்றம்

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் துணைத் தலைவர் அவர் களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்

,'இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 5 அரசினர் சட்ட முன் வடிவுகள்-ஆய்வு செய்தல், உள்ளினம் (ii) யை ஒத்திவைத்து விட்டு கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளை அறிமுகம் செய்து, அவைகள், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

(1) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரி கள் நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு.

(2) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக்குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு.

(3) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.

4) அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி

(பிற்பகல் 12·20)

(ஊ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1982.

(எ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு 1982.

(ஏ) ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்டமுன் வடிவு 1982.